செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி

இல: 1050 | 1970 ஜூன் 8 திங்கட்கிழமை | விலை சதம் 5

University of Jaffna Sri Lanka RECEIVED 7-8 Periodicals Division Library

## நிதி பற்றுக்குறை தீர்க்கப்பட்டவுடன்

# இரண்டு கொத்து அரிசி வழங்கத் தீர்மானம்

**நிதி மந்திரி டாக்டர் என். எம். பெரேரா தற்போதையு நிதி பற்ருக் குறையைு விரைவில் நிவர்த்தி செய்தவுடன், இரண்டு கொத்து அரிசியைு அரசாங்கம் வழங்கும்.**

இரண்டு கொத்து அரிசியை வழங்கும் அதேசமயத்தில், சாயிகளுக்கு மேலும் உதவி யும் நடவடிக்கைகளையும் அரசாங் கம் மேற்கொள்ளும். இவை சம்பந்தமாகப் பல யோசனைகள் இப்போது ஆராய பட்டு வருகின்றன. விவசாயக் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறிய விவசாயிகளிட

மிருந்து முன்னைய அரசாங்கம் பறி விலை முதல் செய்த அரிசிக் கூப்பன்களை செய் திருப்பி அவர்களிடம் ஒப்படைக்க அரசாங்கம் தீர்மானித்துள் ளது. இம்மாதத்துக்குள் பறிமுதல் செய்யப்பட்ட கூப்பன்கள் அனைத் தும் ஒப்படைக்கப்படும். அதேசமயம் விவசாயிகளுக்கு கடன் வசதிகளை அளிக்கவும் அர சாங்கம் தீர்மானித்துள்ளது.

தாங்கள் அறுவடை செய்யும் நெல்லை உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் விற்க அவர்கள் சம் மதிக்க வேண்டும் என்பது மட்டுமே இதற்கு நிபந்தனை ஆகும். (வ)

மீனாட்சி



என்னுங்க, இந்தச் சின்னப் பயலுகள் எல்லாம் நேரத்தோடை பள்ளிக் கூடத்திற்குப் போய்விட்டுதுகள்!

ஆமாங்க, இப்ப மத்தியானத்திலே பணிஸ் கிடைக்கப் போகுதாம்!

## கட்டான இடைத் தேர்தல்

கட்டான தொகுதிக்கான இடைத் தேர்தல் அடுத்த மாதம் முதலாம் திகதி நடைபெறும். இந்த இடைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யும் தினம் நேற்ருக இருந்த போதிலும் புதியவர்கள் எவரும் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யவில்லை.

சிங்கள மகாஜனக் கட்சி அபேட்சகர் திரு. ரஞ்சன் பெர்ணண்டோபுள்ளே காலமானதால் கட்டான தொகுதியின் தேர்தல் மே மாதம் 27-ம் திகதி நடைபெருமல் ஒத்திவைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (ம)

## இலங்கைவருகை

கொழும்பு, ஜூன். 8

போதைப் பொருள் ஆலோசனை குழுவொன்று இலங்கை வந்துள்ளது.

இக் குழுவினரும் இலங்கை போதைப் பொருள் அதிகாரிகளும் கூடி கொழும்பில் மகாநாடொன்று நடத்துவர். (-7)

## பலாத்காரச் செயல்கள் பற்றி செனட்டில் விவாதம்

கொழும்பு, ஜூன், 8

கடந்த அரசின் ஆட்சி காலத்தில் மக்கள் பசியுடனும் பட்டினியுடனும் அல்லல் பட்டதாலேயே நாட்டின் பல பகுதிகளிலும் வன்செயல்கள் நடைபெற்றன என்று மூதவை உறுப்பினர் திரு. ரெஜி பெரேரா கூறினார்.

மூதவையின் முதலாவது கூட்டம் நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு தலைவர் திரு. ஏ. ரத்னுயக்கா தலைமையில் கூடியது.

நிகழ்ச்சிகளின் ஆரம்பத்தில் மகா தேசாதிபதி திரு. வில்லியம் கொபல்லாவ விடுத்த பிரகடனம் சபையில் வாசிக்கப் பட்டது.

ஒத்திவைப்புப் பிரேரணையின் போது பேசிய திரு. ஏ. எப். விஜயமான கூறியதாவது:–

“நாட்டின் பல பகுதிகளிலும் இன்று மக்கள் பீதியுடன் வாழ்ந்து வருகிருர்கள். நாட்டில் தலைதூக்கி உள்ள வன் செயல்கள், குழப்பங்களை அடக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது இந்த அரசாங்கத்தின் கடமை.

“எனக்குக் கிடைத்த தகவல்களின்படி கேகாலை, பொல்கஹவலை, கம்பளை, ஹொரணை, ஹோமகம, களுத்துறை, ருவான் வெல்லை, தெகியோவிட்ட, டெடிகம, கல்கமுவ போன்ற இடங்களில் குழப்பங்கள் நடைபெற்று உள்ளன.

“கலாநிதி தகநாயக்கா எனக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் காலியில் காடைத்தனமும், வன் செயல்களும், சட்டம் மீறிய செயல்களும் நடைபெற்றதாக குறிப்பிட்டுள்ளார்.

“அரசியல் விரோதங்கள் காரணமாக மே 28ம் திகதி முதல் ஜூன் 1ம் திகதி வரை 13 கொலைகள் நடைபெற்று இருப்பதாகவும் தெரிய வருகிறது. இன்று ஜூன் 7. இது வரையில் மேலும் எத்தனையோ தெரியாது?

“இலங்கை போக்குவரத்துச் சபையிலும், வேறு சில வேலைத் தலங்களிலும் தொழிலாளர்கள் சிலர் பயமுறுத்தப்பட்டு இப்பொழுது ஆட்சியில் உள்ளவர்கள் சிலரின் படத்தை வீழ்ந்து வணங்கும்படி பணிக்கப் பட்டுள்ளார்கள்.

“தனிப்பட்டவர்கள் சிலரின் படங்கள் இந்த நாட்டில் வணங்கப்பட வேண்டும் என வற்புறுத்

(4-ம் பக்கம் பார்க்க)



சிட்டுக் குருவியைப் போல் சிறகடித்துப் பறப்பவளோ — எட்டி நடை பயிலும் அந்த எழில் மங்கை இவள்தானே? (ய)

→

## 1000 ரூபா பிணையில் வீடு செல்ல அனுமதி

# வேலைக்காரி கற்பு பலி டாக்டர் மீது வழக்கு

## ஜூன் 26ம் திகதி மீண்டும் நதிமன்றம் வர உத்தரவு

**வேலைக்காரியான பதினைந்து வயதுக் குமரியைக் கற்பழித்ததாகக் குற்றம் சாட்டி டாக்டர் ஒருவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட டாக்டர் 1000 ரூபா பிணையில் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார்.**

வெள்ளவத்தை அனுலா ஸ்ரேட்டைச் சேர்ந்த டாக்டர் ஆர். டி. ஜி. சங்கர் என்பவர் கொழும்பு தெற்கு நீதவான் திரு. கொலின் மெண்டிஸ் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது அவரை 1000 ரூபா பிணையில் வீடுசெல்ல அனுமதித்த நீதவான் மீண்டும் 26-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

பதினைந்து வயது வேலைக்காரியைக் கற்பழித்ததாக இந்த டாக்டர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பம்பலப்பிட்டி தொடர்மாடிக் கட்டடத்தில் வசிக்கும் திருமதி சங்கர் (அயோனா பெரேரா) என்பவரின் முறைப்பாட்டை அடுத்து டாக்டர் சங்கரை வெள்ளவத்தைப் பொலீஸார் கைது செய்திருந்தனர்.

டாக்டர் சங்கர் இலங்கையிலுள்ள மூன்று பெரிய கம்பெனிகளின் டைரக்டராகவும், நிர்வாக அதிகாரியாகவும் இருக்கிறார்.

வழக்கறிஞர்கள் திரு. பி. பி. மெண்டிஸ், திரு. வி. நாகராஜா ஆகியோர் எதிர் தரப்பில் ஆஜரானார்கள். வெள்ளவத்தை பொலீஸ் இன்ஸ்பெக்டர் கே. ஏ. என். சி. பெரேரா வழக்கை நடத்தினர். (ம)

## சடலங்கள் எரிப்பு

லீமா (பெரு), ஜூன் 6

பெரு பூகம்பத்தால் உயிர் இழந்தோரின் தொகை இப்போது 50,000 ஆக உயர்ந்திருப்பதாக அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.

தொற்று வியாதிகள் பரவுவதை தடுக்கும் முயற்சியாக ஆயிரக்கணக்கான சடலங்கள் குவிக்கப்பட்டு எரிக்கப்பட்டு வருகின்றன.

ஹுவறாரஸ் என்னும் பகுதியில் மட்டும் 10,000-க்கு அதிகமானோர் இறந்திருப்பதோடு, டஜன் கணக்கான கிராமங்களும் நகரங்களும் முற்றாக அழிந்துள்ளன.

## பஸ் விபத்தில் 32 பேர் காயம்

இ. போ. ச. பஸ் ஒன்று பொகவந்தலாவ – கொழும்பு வீதியில், கும்பல்முல்லா கொபாத சந்தியில் ஒரு லொறியுடன் மோதியதால் 2 பிரயாணிகள் படுகாயமுற்றனர்.

கரவனெல்லா ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் விபரம் வருமாறு. ஏ. கே. வேலுன்சிங்கோ (கிரிபொருவ), ஏ. எச். திலகசேன (நோர்வூட்), எம். இராமகிருஷ்ணன் (அட்டன்), எஸ். உம்மா (எட்டியாந்தோட்டை), என். ஏ. டேவிட் (குடவத்தை), ஐ. ஏ. ஒபேயசேகரா (தல்திவ), பி. ஜி. ஜினதாச (டிக்கோயா), எஸ். ஜகந்நாதன் (அப்கொட்), டபிள்யூ. வை. தரவன்ச (மீதோட்டமுல்லை). (ம)

## 125 பட்டுச் சேலைகளை பொலீஸார் பிடித்தனர்

யாழ்ப்பாணம், ஜூன். 7

திருநெல்வேலியிலுள்ள ஒரு வீட்டில் வைத்து இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கடத்திவரப்பட்டதாகக் கருதப்படும் 7,000 ரூபா பெறுமதியான 125 பட்டுச் சேலைகளை ஊர்காவற்றுறைப் பொலீஸ் பொறுப்பதிகாரி திரு. ஆறுமுகம் இராசையா கைப்பற்றினார்.

பொருட்கள் யாவும் யாழ்ப்பாணம் சுங்கப்பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக உதவி கலக்டர் திரு. ஏ. எல். சேனரத்தின விசாரணை நடாத்துகிறார். (ம-220)

## குழந்தையை குளத்தில் போட்ட கன்னி யாரோ?

பச்சிளம்குழந்தையை பாவாடையில் சுற்றி சாக்கில் கட்டி, பதினைந்தல் கல்லோடு சேர்த்து குளத்தில் போட்ட கன்னி யார்? என்பதை கண்டுபிடிப்பதில் மஸ்கெலியா பொலீஸார் தீவிர கவனஞ் செலுத்தி வருகின்றனர்.

இதுபற்றி கூறப்படுவதாவது:- சீமைத் தோட்டம், டீசைட் தோட்டங்களுக்கருகே அவரவத்தைத் தோட்டத்தில் ஒரு தெப்பக்குளம் இருக்கின்றது. சில நாட்களுக்கு முன் தெப்பக்குள மலைக்குக் கொழுந்து கொய்யச் சென்ற பெண்கள் குளத்தின் ஓரத்திலே ஒரு வடக்கயிறு கிடப்பதை அவதானித்தனர். வேலைக்கு உதவும் என நினைத்து சில பெண்கள் வடக்கயிற்றை இழுத்தனர். சற்று கடினமான மூடையுடன் வடக்கயிறு வந்தது.

பெண்கள் கங்காணியிடம் இது பற்றி முறையிடவே அவர் மூடையைப் பிரித்துப் பார்த்தார். உள்ளே கல்லோடு கட்டப்பட்ட அழுகிய நிலையில் சிசுவின் சடலமிருந்தது. தக்க அதிகாரிகளின் கவனத்துக்கு விஷயம் கொண்டுவரப்பட்டது.

இப்போது மஸ்கெலியா பொலீஸார் பெற்ற பிள்ளையை பெண் குழந்தையை கல்லோடு கட்டி குளத்திலிட்டு கொலைசெய்த அந்தத் கொடூரமான கன்னி யார்? என்பதைக் கண்டுபிடிக்க முயன்று வருகின்றனர். (ம-311)

## ஆழ்ந்த தூக்கத்தில் கிடந்த பெண்ணுக்கு நேர்ந்த கதி

தந்தை ஒருவர் 14 வயது நிரம்பிய தனது அழகு மகளைக் கற்பழிக்க முயன்றதாக நல்லூர் பொலீஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

நல்லூரைச் சேர்ந்த சந்திரலேகா வேலாயுதம் என்னும் இளம் பெண் தனது புகாரில் கூறியுள்ளதாவது: "எனது தந்தை சில வருட காலமாக எனது தாயைப் பிரிந்திருக்கிறார். நான் தந்தையின் தாயாருடன் வாழ்ந்து வருகிறேன். சம்பவம் நடந்த இரவு நான் நித்திரையாக இருந்த போது யாரோ எனது தொடையை தடவுவதை உணர்ந்தேன். உடனே நான் திடுக்கிட்டு விழித்துக் கொண்டேன். எனது தந்தை என்னை சத்தம்போட வேண்டாம் என்றும் அப்படிச் சத்தம் போட்டால் கொன்றுவிடுவதாக பயமுறுத்தி பின் எனது மார்ம ஸ்தானத்தை மூன்று முறை முத்த மிட்டார்.

"அதன் பின் என்மீது குற்றம் புரிந்தார். மறுநாள் காலை நான் எனது தாயாரிடம் ஓடிச்சென்று நடந்தவற்றை தெரிவித்தேன். அதன் பிறகு நானும் எனது தாயாரும் இங்குவந்து புகார் செய்தோம்" என்றார்.

இதை அடுத்து நல்லூர் பொலீஸ் பொறுப்பதிகாரி சந்தேகநபரான வேலாயுதம் என்பவரை கைது செய்துள்ளார். இது சம்பந்தமாக பொலீஸார் தொடர்ந்து விசாரணை நடத்துகிறார்கள். (ம-220)

## தாயை, சகோதரியை தாக்கியவருக்கு சிறை

சகோதரியைத் தாக்கியதாகவும் வயோதிபத் தாயைக் கத்தியால் குத்தியதாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்த வாலிபர் நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக் கொண்டார். கொழும்பு அரசாங்க நீதிமன்றத்தில் அவருக்கு 9 மாதம் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கும்பனித் தெருவைச் சேர்ந்த பெருமாள் முத்தையா தர்மலிங்கம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதும், சகோதரி அம்மணி அம்மாவையும், தாய் பிச்சையம்மாவையும் தான் தாக்கி காயம் ஏற்படுத்திய குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

எதிர்பாராத சூழ்நிலையில் இந்தக் குற்றம் இழைக்கப்பட்டது என்றும், அதற்காக மன்னிக்கும்படியும் விடுக்கப்பட்ட மன்றுட்டமனுவை அரசாங்க வழக்கறிஞரும் ஏற்றுக் கொண்டார். (ம-177-ச)

## அரபு கெரில்லா ராக்கெட் தாக்குதல்

டெல் அவீவ், ஜூன் 7

இஸ்ரவேல் எல்லைப் பிரதேச நகரமொன்றின் மீது அரபு கெரில்லாக்கள் ரஷ்ய தயாரிப்பு ராக்கெட்டுகளை கொண்டு புதிய தாக்குதலை நடத்தின.

லெபனன் எல்லையில் இருந்து, சக்தி மிக்க இந்த வெடி ராக்கெட்டுகள் சுடப்பட்டதாக இராணுவ அதிகாரி ஒருவர் கூறினர். ஒரு வாரத்தில் நடத்தப்பட்ட மூன்றுவது தாக்குதல் இதுவாகும்.

இத் தாக்குதலில் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் இஸ்ரவேல் படைகள் திருப்பிச் சுட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (ர)

### ஆச்சரியம் எதுவுமில்லை

பள்ளிச் சிறுருக்குப் பழையபடி பணிஸ் கிடைக்கும்- முன்னைய அரசாங்கம் நியாயமின்றி, விளக்கமின்றி பணிஸ் மதிய போசனத்தை நிறுத்திச் சீனி பூசிய விசுக்கோத்தை அளித்தது- புதிய கல்வி அமைச்சர் பணிஸை மீண்டும் வழங்கும்படி உத்தரவிட்டுள்ளார்- சீனி போட்ட விசுக்கோத்தைப் பெருந் தொகையான சிறுவர்கள் விரும்பவில்லை- பணிஸைப் போன்று அது சுவையுடையதாக இல்லை என்றும் அழுத்தந் திருத்தமாகத் தெரிவித்தனர்- அந்தச் சீனி விசுக்கோத்தை உண்ணவும் மறுத்தார்கள்- இதில் ஆச்சரியம் எதுவுமில்லை- நாட்டு மக்களுக்கு ஐந்தாண்டு காலமாக முன்னைய அரசாங்கம் வழங்கிய சீனி பூசிய பலவேறு சரக்குகள் எவ்வாறு விழுங்க முடியாதனவாக இருந்தனவோ, அவ்வாறுதான் சீனி பூசிய விசுக்கோத்தும் சிறுவர்களால் தின்று தொள்ள முடியாதனவாக இருந்துள்ளன-

தந்தி

**தந்தி சிறு விளம்பரங்கள்**

அதிர்ஷ்ட நியூமராலஜி

உங்களின் பெயர், கை எழுத்து, தொழில், உங்களுக்கு இவைகள் பொருத்தமாக அதிர்ஷ்டமுடன் அமைந்தால்தான் நீங்கள் உங்களின் வாழ்க்கையில் அதிர்ஷ்டமுடன் வெற்றி பெற்று வாழ முடியும். இலவச விபரங்களுக்கு எழுதுங்கள், அவர் இண்டிபெண்டன் லக்கி சென்டர், 60¼ ரெக்லமேசன் ரோடு, கொழும்பு – 11

R. 66013

பிரசித்த ஏலவிற்பனை

சாமிமலை கடைவீதி 23-ம் நிர். கடையில் நகை அடைவு பிடிக்கும் பெ. தேவரையபிள்ளை அவர்களிடம் 21-8-65 முதல் 30-4-69 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் 1970 ஜூலை மாதம் 2-ம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் குறித்த கடையில் இருந்து பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

A. M. சோமசுந்தரம்,
வெந்திஸ் மேஸ்தர்.

அட்டன்.
6-6-70.

பிரசித்த ஏலவிற்பனை

டிக்கோயா கடைவீதி 436-ம் நிர். கடையில் நகை அடைவு பிடிக்கும் ரா. ம. முத்துசாமிபிள்ளை அவர்களிடம் 29-3-67, முதல் 30-5-69 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் 1970 ஜூன் மாதம் 25-ம் திகதி வியாழக்கிழமை பகல் 12 மணி தொடக்கம் குறித்த கடையில் இருந்து பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

A. M. சோமசுந்தரம்,
வெந்திஸ் மேஸ்தர்.

அட்டன்.
6-6-70.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டிலே யாரும் இல்லை, நிர்வாண கோலத்தில்

# காதலனுடன் என் மகள் கட்டில் மீது கிடந்தாள்

## ஜீவனாம்ச வழக்கு ஒன்றில் அப்பாவித் தந்தை சாட்சி

"ஒரு நாள் கடைக்குப் போய் விட்டு நான் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது எனது மகளும், ஜயசேனவும் ஒன்றாகக் கட்டிலில் நிர்வாணமாகப் படுத்திருந்ததைக் கண்டேன். ஆத்திரம் கொண்ட நான் இருவரையும் கொல்லப் போவதாக சத்தம் போட்டேன். அப்போது ஜயசேன குசினிப் பக்கத்துக் கதவு வழியாக வெளியே ஓடி விட்டார்."

கண்டி மேலதிக நீதவான் திரு. விமல் விக்கிரமசூரியா முன்னிலையில் நடைபெற்ற ஜீவனாம்ச வழக்கொன்றில் சாட்சியம் அளித்த யூ. ஜீ. வெலியா என்பவர் மேற்கண்டவாறு கூறினார்.

உதவெதர அலிஸ் என்னும் இளம் பெண் கண்டி இ. போ. ச. சாரதி டபிள்யூ. டி. ஜெயசேன என்பவரிடம் தனது குழந்தைக்கு ஜீவனாம்சம் கோரி வழக்குத் தொடர்ந்துள்ளார்.

ஜெயசேனவின் ஆசைநாயகியாக தான் வாழ்ந்ததாகவும், அதன் மூலம் குழந்தைக்குத் தாயானதாகவும், ஜயசேன தன்னைப் பராமரிக்காமல் விட்டபடியால் தான் வழக்குத் தொடர்ந்ததாகவும் அலிஸ் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

வழக்கு விசாரணையில் சாட்சியம் அளித்த அலிஸின் தந்தை யு. ஜீ. வெலியா மேலும் கூறியதாவது:- "ஜயசேனவை எனக்கு நீண்ட காலமாகத் தெரியும். அவர் என்னை மாமா என்று அழைப்பார். வீட்டுக்கு அவர் அடிக்கடி வருவார். எனது மகளுடன் அவர் காதல் தொடர்பு கொண்டுள்ளதாகக் கேள்விப் பட்டேன்.

"சம்பவம் நடைபெற்ற தினம் எனது மனைவி வெளியே சென்றிருந்தாள். மற்றப் பிள்ளைகளும் பாடசாலைக்குச் சென்று விட்டார்கள். நானும் கடைக்குப் புறப்பட்டேன். வீட்டில் என் மகள் அலிஸ் மாத்திரம் தனியே இருந்தாள். நான் கடையால் வீட்டுக்கு திரும்பி வந்து கதவைத் திறந்த போது எனது மகளும் ஜயசேனவும் ஒரு கட்டிலில் நிர்வாணமாகப் படுத்திருந்ததைக் கண்டேன்.

"ஆத்திரம் கொண்ட நான் இருவரையும் கொல்லப் போவதாக சத்தம் போட்டேன். உடனே ஜயசேன படுக்கையில் இருந்து எழுந்து ஓடிவிட்டார்.

"ஐயா, எங்கள் குடும்பம் என் ஒருவன் உழைப்பையே நம்பி இருக்கிறது. எனது பிள்ளைகளை கிராம வாழ்க்கையை அடியொற்றியே வளர்த்து வருகிறேன். பிள்ளைகள் முறைகேடான வாழ்க்கை வாழ்வதைக் காண என்னால் பொறுக்க முடியாது. எனது மகளையும், ஜயசேனவையும் கட்டிலில் நிர்வாண கோலத்தில் கண்ட போது நான் அடைந்த அதிர்ச்சியும், துன்பமும் சொல்ல முடியாதது" என்றார்.

மேல் விசாரணை ஜூன் 18-ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (ம)

## ஆதரவு தந்தவர்களுக்கு அஸீஸ் நன்றி தெரிவிக்கிறார்

"கூட்டணியினருக்கு வாக்களித்து, அவர்களை ஆட்சிபீடமேற்ற உதவிய அனைத்து தோட்டத் தொழிலாளர்களுக்கும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் நியமன எம். பீயுமான ஜனாப் ஏ. அஸீஸ் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தம் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது—

"தோட்டத் தொழிலாளர்களினது பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியதன் அத்தியாவசியத்தை நன்குணர்ந்து முக்கூட்டு முன்னணி தோட்டத் தொழிலாளர்களுக்குத் தான் என்ன என்ன செய்யப் போகிறது என்பதை தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவுற எடுத்துக் காட்டியது.

"அதே வேளையில் ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தொழிலாளர்களுக்கு நலன் விளைவிக்கும் எந்தத் திட்டம் பற்றியும் குறிப்பிடப்படவில்லை — இதனாலேயே ஜ. தொ. கா. கூட்டணிக்கு ஆதரவளிக்க தீர்மானித்தது. இலங்கையின் வரலாற்றிலேயே முதன் முதலாக, தோட்டத் தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் வண்ணம் தேர்தல் விஞ்ஞாபனம் அமைத்துள்ளமை போற்றத்தக்கதாகும்.

"தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டுமென நாம் பல ஆண்டுகளாகப் போராடி வந்துள்ளோம். இதை முக்கூட்டு முன்னணி நிச்சயமாக வழங்கும். மேலும், இரண்டு கொத்து அரிசியைத் திரும்பவும் வழங்கவும், தோட்டங்களுக்குள் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் பிரவேசிக்க உரிமை அளிக்கவும், ஊழியர் சேமலாப நிதிக்கு முதலாளிமார் செலுத்தும் தொகையினை அதிகரிக்கவும், தொழிலாளர் உரிமைகள் பற்றி சட்டம் கொண்டு வரவும், பெண் தொழிலாளருக்குப் பாகுபாடான சம்பளம் வழங்குவதை ஒழிக்கச் சட்டம் கொண்டு வரவும், வயது வந்தோர்க்குப் பென்ஷன் வழங்க சட்டம் கொண்டு வரவும், முக்கூட்டு முன்னணி நடவடிக்கை எடுக்கும் எனத் தன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டது. இதையிட்டு ஜ. தொ. கா. தனது முழு ஆதரவையும் கூட்டணிக்கு அளித்தது.

"கூட்டணி ஆட்சிக்கு வந்துள்ளதன் மூலம், இந் நாட்டில் வாழும் சகல மக்களும், சகோதரத்துவத்தோடு, சமாதான சகவாழ்வு, வாழ்வதற்கு வழிபிறந்துள்ளது. எனவே நாட்டின் பொருளாதார வளத்தைப் பெருக்கவும், நாட்டை சுபீட்சப் பாதைக்கு இட்டுச் செல்லவும், கூட்டணிக்கு வாக்களித்தோர் மட்டுமல்ல, ஏனையோரும் ஆதரவு தரவேண்டியது இன்றியமையாததாகும்" இவ்வாறு ஜனாப் அஸீஸ் குறிப்பிட்டுள்ளார். (ம)

## தேர்தல் வெற்றி தந்த மகிழ்ச்சியில் திருமணம்

சாவகச்சேரி, ஜூன், 7

"காதலர் இருவர் கருத்தொருமித்த பின்பும், இலட்சியத்திற்காக திருமணத்தை ஒத்தி வைத்திருந்தது போதும். இன்று இலட்சியம் நிறைவேறிவிட்டது. இனி மணமாலை சூடி பதினாறும் பெற்று பெரு வாழ்வு வாழ்க!"

தமது கட்சி வேட்பாளர் தேர்தலில் வெற்றி பெற்றால் அன்றி திருமணம் செய்வதில்லை என்றிருந்த ஒரு வாலிபர், தனது வேட்பாளர் வெற்றியீட்டியதும் திருமணம் செய்து கொண்ட போது, அவர் ஆதரித்த வேட்பாளர் தனது அன்பரின் மணவேளையில் இப்படி ஆசி கூறினார்.

சாவகச்சேரியில் நடைபெற்ற இச் சுவையான சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது—

மட்டுவிலைச் சேர்ந்த வாலியர் ஒருவர் தமிழரசுக் கட்சி வேட்பாளர் வெற்றி பெற்றாலே அன்றித் தான் திருமணம் செய்து கொள்வதில்லை என்ற சபதம் செய்திருந்தார். அவரின் சபதத்தின்படி அவர் ஆதரித்த வேட்பாளர் தேர்தலில் வெற்றியீட்டினார். தேர்தல் முடிந்த மூன்றும் நாள், இலட்சிய வாலிபரின் திருமணமும் சிறப்பாக நடைபெற்றது. அவருடைய எம். பி. திரு. வீ. என். நவரத்தினம் அவரை பதினாறும் பெற்று பெரு வாழ்வு வாழ்க என்று வாழ்த்தினார். (ம-51)

## பூநகரிக் காட்டு கொலை: வாலிபர் ஒருவர் கைது

சாவகச்சேரி, ஜூன், 7

பூநகரி காட்டினுள் நிகழ்ந்த சாவகச்சேரி கார் சாரதியான சிதம்பரராஜாவின் மர்மக் கொலை சம்பந்தமாக கொலையாளியின் உடைகளைக் கண்டு பிடித்த பொலீஸார் இது சம்பந்தமாக வாலிபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

பூநகரி காட்டினுள் அண்மையில் நடைபெற்ற இப் பரிதாப சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது—

சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த சிதம்பரராஜா என்ற கார் சாரதியை பூநகரியில் உள்ள ஒரு காட்டில் கடந்த மாதம் மர்மமாகக் கொலை செய்யப்பட்டிருந்தது. இதையொட்டி நடைபெற்ற புலன் விசாரணையில் பொலீஸார் ஒரு வாலிபரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட வாலிபருடன், பூநகரியில் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விஜயம் செய்த பொலீஸார் கொலை செய்தவர்கள், கொலை நடைபெறும் போது உடுத்திருந்த உடுப்புகளை நிலத்தினுள் புதைத்து வைக்கப்பட்ட இடத்தைக் கண்டு பிடித்து அந்த உடைகளைக் கைப்பற்றினர். அத்துடன் கார்ச் சாவியையும், வேறு சில பொருட்களையும் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

கொழும்பிலிருந்து கொலை நடந்த இடத்திற்கு விஜயம் செய்த கைரேகை நிபுணர்கள், கொலை செய்யப்பட்ட இடத்தில் வீசப்பட்டிருந்த போத்தல்களையும் பரிசோதனை நடத்தி கைரேகை அடையாளத்தைப் பதிவு செய்து கொண்டதுடன், காரிலும் இருந்த கைரேகை அடையாளங்களையும் பதிவு செய்து பரிசோதனைக்காக எடுத்துச் சென்றுள்ளனர். பொலீஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

(ம-51)

## பூகம்பத்துக்கு அணு சோதனை காரணமா?

டியூபின்ஜென், ஜூன் 7

சமீபத்தில் பிரான்ஸ், பசுபிக் சமுத்திரத்தில் நடத்திய அணுசக்தி பரிசோதனை பெரு பூகம்பத்துக்குக் காரணமாகுமா?

இப்பரிசோதனையாலேயே இந்த அழிவு ஏற்பட்டதென்று உலகின் சில பகுதிகளில் கருதப்படுவதற்கு, மறைமுக, மாறான கருத்தை மேற்கு ஜெர்மன் புவியியல் நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அணுசக்தி பரிசோதனை அது நடத்தப்பட்ட இடத்திலேயே உடனடியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அப்படியல்லாது அலஸ்காவில் நடத்திய பரிசோதனை துருக்கியில் தாக்கம் ஏற்படுத்தாது என்றும் டாக்டர் வேர்ணர் என்னும் அந்த நிபுணர் தெரிவித்துள்ளார். (ர)

## சீன உதவி பிரதமர் தாக்கு

ஹொங்கொங், ஜூன் 7

கம்போடியாவுக்கு தென் வியட்நாம், தாய்லந்து படைகளை அனுப்புவதாக சீன உதவிப் பிரதமர் அமெரிக்காவை குற்றம் சாட்டினர்.

## சம்பளம் 24 ரூபா—ஆனால் 40 ரூபா தரச் சம்மதம்

விற்பனை இலாகாவில் வேலை செய்யும் தொழிலாளி ஒருவர் தான் சம்பளமாக 24 ரூபா மட்டுமே பெறுகின்ற போதிலும், தன் மனைவிக்கும் பிள்ளைக்கும் 40 ரூபா ஜீவனாம்சமாகத் தரச் சம்மதித்தார்.

கண்டி மாஜிஸ்ரேட் திரு. எவ். பி. ஜீ. பெர்னாண்டோ முன்னிலையில் விசாரிக்கப்பட்ட வழக்கில் எச். உக்குமெனிக்கா தன் கணவன் ரி. எம். ஜயவர்த்தனவிடம் தாபரிப்புக் கோரியிருந்தார்.

ஜயவர்த்தன தான் உக்குமெனிக்காவின் கணவன் என்பதையும், ஒரு பிள்ளைக்குத் தந்தை என்பதையும் ஒப்புக்கொண்டார்.

மாஜிஸ்ரேட் (மனுதாரரைப் பார்த்து): நீ என்ன சொல்கிறாய்?

எதிர் மனுதார்: அவர் இன்னொரு பெண்ணை வைத்திருக்கிறார்.

எதிர் மனுதார்: என்னை வீட்டை விட்டுத் துரத்திய படியால் நான் அவளை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை.

மனுதார் வழக்கறிஞர்: அவர் விற்பனை இலாகாவில் 200 ரூபா சம்பளத்தில் வேலை செய்கிறார்.

எதிர்மனுதார்: இல்லை ஐயா. 130 ரூபாதான்.

மனுதார் வழக்கறிஞர்: மனைவிக்கு 50 ரூபாவும், பிள்ளைக்கு 30 ரூபாவும் கோருகிறோம்.

எதிர் மனுதார்: இருவருக்கும் நான் 40 ரூபா தரச் சம்மதம்.

மாஜிஸ்ரேட்: உனக்கு ரூ. 140ஐ வைத்துக் கொண்டு, மனைவிக்கும் பிள்ளைக்கும் ரூ. 40 தான் கொடுக்க முடியுமா?

எதிர் மனுதார்: கழிவுகள் எல்லாம் போக மீதியாக 24 ரூபா தான் கிடைக்கிறது ஐயா.

மாஜிஸ்ரேட்: அப்படியானால் எப்படி 40 ரூபா கொடுக்க முடியும்?

எதிர் மனுதார்: 40 ரூபாவுக்கு மேல் என்னால் கொடுக்க முடியாது ஐயா.

மேல் விசாரணை ஜூலை 2-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டு உள்ளது. (ம-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாவது நாடாளுமன்றம் குதூகலமாக ஆரம்பம்:

# ஸ்டான்லி திலகரத்தின சபாநாயகரானார்

## உப சபாநாயகராக வேருவளை எம். பி. தெரிவு

**இலங்கையின் ஏழாவது நாடாளுமன்றத்தின் சபாநாயகராக கோட்டே எம். பி. திரு. ஸ்டான்லி திலகரத்தின நேற்றுஏகமனதாகதெரிவு செய்யப்பட்டார். வேருவளை எம். பி. ஜனுப் ஐ. ஏ. காதர் உப சபா நாயகரானார்.**

திரு. ஸ்டான்லி திலகரத்னவின் பெயரை திரு. மைத்திரிபால சேனநாயக்கா முன்மொழிந்தார். எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்தன அதனை வழிமொழிந்தார்.

இலங்கையின் நாடாளுமன்றச் சரித்திரத்தில் மிகவும் வயது குறைந்த சபாநாயகர் என்ற பெருமையைப் பெற்றுள்ள இவருக்கு வயது 40 ஆகும்.

திரு. ஸ்டான்லி திலகரத்ன சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் சபை முதல்வர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவும், திரு. ஜே. ஆர். ஜெயவர்தனவும் அவரை சபாநாயகர் ஆசனத்துக்கு அழைத்துச் சென்றனர்.

நாடாளுமன்றத்தின் கலரிகள் நிரம்பி வழிந்தன. நாடாளுமன்றத்துக்கு வெளியே பெருந்தொகையான மக்கள் குழுமி நின்றனர். நாடாளுமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஐக்கிய முன்னணி அரசாங்கத் தலைவர்கள் வந்த சமயம் ஜனக் கூட்டம் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தது.

நாடாளுமன்றத்துக்குள் 123 ஆசனங்கள் அரசாங்க தரப்பில் ஒதுக்கப்பட்டிருந்தன.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 17 அங்கத்தவர்களையும் தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் கட்சிகளைச் சேர்ந்த 16 அங்கத்தவர்களையும் சுயேச்சை எம். பி. ஒருவரையும் கொண்ட எதிர்க்கட்சிப் பக்கத்தில் மூன்று வரிசைகள் மட்டுமே இடம் பெற்றிருந்தன.

எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள திரு. ஜே. ஆர். ஜெயவர்தனவுக்கு அருகில், முன்னாள் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா அமர்ந்திருந்தார்.

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஆசனத்தை எதிர்நோக்கியபடி திரு. ஜே. ஆர். ஜெயவர்தனவின் ஆசனம் போடப்பட்டிருந்தது.

நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டம் பிற்பகல் 2–00 மணிக்கு ஆரம்பமான போது சபை இலிகிதர் திரு. சாம் விஜேசிங்க மகாதேசாதிபதியின் பிரகடனத்தை சபையில் வாசித்தார்.

சபாநாயகர் தெரிவு நடைபெற்ற பின்னர் பல்வேறு கட்சிப் பிரதிநிதிகளும் சபாநாயகரைப் பாராட்டிப் பேசினர்.

திரு. ஸ்டான்லி திலகரத்தின சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டதைப் பாராட்டி, சபை முதல்வர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா, எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்தன, தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், தமிழ் காங்கிரஸ் கட்சி நாடாளுமன்றக் குழுவின் தலைவரும், நல்லூர் எம். பி. யுமான திரு. சி. அருளம்பலம், ஹபரதுவ எம். பி. பிரின்ஸ் குணசேகரா, கொழும்பு மத்திய தொகுதி உறுப்பினர் திரு. ஆர். பிரேமதாச, நிக்கவரட்டிய எம். பி. திரு. முதியான்சே தென்னக்கூன், நியமன எம். பி. ஜனுப் ஏ. அஸீஸ் ஆகியோர் உரையாற்றினர்.

சபாநாயகர் நன்றி தெரிவித்துப் பேசிய பின்னர், சபாநாயகர் அணியும் உடையை அணிந்து கொள்வதற்காகச் சபையை அரை மணித்தியாலத்துக்கு ஒத்தி வைத்தார்.

சபை மீண்டும் கூடிய போது எம். பி. க்கள் சபாநாயகர் முன் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இதன் பின்னர் வேருவளை எம். பி. ஜனுப் ஐ. ஏ. காதர் உப சபாநாயகராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதை தொடர்ந்து மாதேசாதிபதியின் சிம்மாசனப் பிரசங்கத்தைக் கேட்பதற்காக நாடாளுமன்றம் மீண்டும் இம் மாதம் 14–ம் திகதி கூடும் என சபாநாயகர் அறிவித்தார். (ம)

புன்னாலைக்கட்டுவன் வாசி நஞ்சூட்டிக் கொலை:

## மாமிக்கும் மருமகனுக்கும் விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 7

புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த செல்லப்பா துரையப்பா என்பவரின் மரணம் சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த காலஞ் சென்றவரின் மனைவி அன்னபூர்ணம் துரையப்பா, அவரின் மருமகன் கணேஸ்வரன் ஆகியோரர் மல்லாகம் நீதவான் திரு. ஆனந்த குமாரசாமி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களை 16-ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிட்ட நீதவான் தொடர்ந்தும் புலன் விசாரணை நடத்துமாறு பொலீஸாரைக் கேட்டுக் கொண்டார்.

காலஞ் சென்றவர் விஷம் கலந்த சாராயம் அருந்தியதால் மரணம் ஆனார் என்று தெரிய வருகிறது. அவரின் மனைவிக்கும், மருமகனுக்கும் கள்ளத் தொடர்பு இருந்ததாகவும், இதன் எதிரொலியாக துரையப்பா நஞ்சூட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும் பொலீஸாருக்கு புகார் கூறப்பட்டுள்ளது.

இதற்கு முன்னமே துரையப்பா தனது ஊர் கிராம சேவகரிடம் தான் எந்த நேரமும் கொலை செய்யப்படலாம் என்று அச்சம் தெரிவித்து இது பற்றிப் புகார் கூறியிருந்தாராம்.

தனக்குத் தரப்படும் உணவில் நஞ்சு கலக்கப்படலாம், எந்நேரமும் கொலை செய்யப்படலாம் என்று புகார் செய்த துரையப்பா திடீரென மரணமானதைத் தொடர்ந்து அவரது மனைவியும், மருமகனும் கைது செய்யப்பட்டனர். (ம–220)

## ராஜன் செல்வநாயகம் ஸ்ரீமாவை ஆதரிப்பதேன்?

"மட்டக்களப்பு தொகுதியின் இரண்டாவது எம். பி. திரு. ராஜன் செல்வநாயகத்தை ஆளும் கட்சியில் சேர்த்து விடுவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு திரைமறைவில் பல காரணங்களும் தில்முல்லுகளும் உள்ளன. திரு. செல்வநாயகம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சேருவதற்கு எடுத்த முயற்சிகள் தோல்வியுற்றன. அப்படி இருக்க, தான் பிரதமரைச் சந்தித்ததாகவும், அவரை மட்டக்களப்புக்கு வருமாறு அழைத்திருப்பதாகவும் திரு. செல்வநாயகம் கூறுவது உண்மைக்குப் புறம்பானதாகும்."

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கிழக்கு மாகாண அமைப்பாளரும், முன்னாள் மட்டக்களப்பு ஐக்கிய தேசியக் கட்சி எம். பி. யுமான ஜனுப் லத்தீப் சின்னலெப்பை தெரிவித்துள்ளார்.

"பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மட்டக்களப்பு இரண்டாவது எம். பி. திரு. ராஜன் செல்வநாயகத்தை அழைக்கவில்லை. ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் தேர்வதற்குத் தான் தயாராக இருப்பதாக திரு. செல்வநாயகமே வேறு சிலர் மூலம் தூதுவிட்டார்.

"அவரின் வேண்டுகோளை ஏற்க முடியாதிருப்பதாகப் பிரதமரும் கல்வி அமைச்சர் டாக்டர் பதியுதீன் மஹ்மூதும் என்னிடம் நேரில் தெரிவித்தனர்.

"கிழக்கிலங்கைக்கு பிரதமரை அழைப்பதோ அன்றி அவருக்கு வரவேற்பு அளிப்பதோ அங்குள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும், கட்சி சார்பில் தேர்தலுக்கு நின்ற வேட்பாளர்களையும், கிளைகளையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியமைப்பாளர்களையும் சேர்ந்ததே." இவ்வாறு ஜனுப் சின்னலெப்பை மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

## தனிமையில் சுகர்ணோவின் 65வது பிறந்த நாள் விழா

ஜாகர்த்தா, ஜூன் 7

இந்தோனேஷிய முன்னாள் ஜனாதிபதியான சுகார்ணோ தனது 65–வது பிறந்த தினத்தை எத்தகைய ஆடம்பரமும் இன்றி அமைதியாகக் கழித்தார்.

முன்னாள் ஜனாதிபதியான சுகார்ணோ தற்பொழுது தடுப்புக் காவலில் இருப்பது தெரிந்ததே.

சுகார்ணோவைக் காணச் செல்லாத அவரது முதல் மனைவியான பத்மாவதி, தனது கணவர் சுகத்துடன் இருப்பதாகப் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

தனது மூன்றாவது மனைவியான ரத்னசாரிதேவியின் வீட்டிலேயே சுகார்ணோ தனது விருப்பத்தின் பேரில் வசித்து வருகின்றார்.

இவரது உடல்நலத்தைக் கவனிக்க இரு டாக்டர்களை ஜனாதிபதி சுகார்ட்டோ கொடுத்து உதவி உள்ளார். மக்களின் நினைவில் இருந்து சுகார்ணோவின் பெயர் மறைய வேண்டும் என்பதையே அரசாங்கத்தின் நடவடிக்கை காட்டுவதாக உள்ளது. (ம)

## பலாத்காரச் செயல்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தப் படுகிறது. நாம் சுதந்திர நாட்டினர், சட்டத்தின் மூலம் தான் இதுபோன்ற செயல்களை நாட்டில் செயல்படுத்த முடியும். இன்று நான் இங்கு கூறுவதை அரசாங்கத்தின் கவனத்துக்கு இந்த சபை கொண்டுவர வேண்டும்.

"சமீப காலத்தில் நடந்தது வன்முறைச் சம்பவங்களை என்ன என்பதை பரிபூரணமாக விசாரணை செய்ய ஒரு கமிஷன நியமிக்கப்பட வேண்டும்."

இது பற்றி சபையில் பேசிய மூதவை உறுப்பினர் ரெஜி பெரேரா கூறியதாவது:–

"மேற்படி தகவல்கள் யாவும் யாரால் சொல்லப் பட்டவை? அவை அனைத்தும் ஊர்ஜிதமற்ற செய்திகளாகும். யு. என். பி. ஆதரவாளர்களே எமது எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு மேற்படி தகவல்களைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் சொல்வதை எப்படி ஏற்க முடியும்?

இவ்வாறு செனட்டர் ரெஜி பெரேரா கூறி முடித்தார்.

மூதவை மீண்டும் எதிர்வரும் 14ம் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டது. (–11)

## பதவிப் பிரமாணம் செய்த புதிய உதவி மந்திரிகள்

ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் புதிதாக நியமனம் பெற்ற 21 உதவி மந்திரிகளில் 18 பேர் நேற்றுப் பகல் 11 மணிக்கு மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவ முன் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

மூதவை உறுப்பினர் திரு. ஜே. பி. ஒபேசேகர (சுகாதார அமைச்சு), திரு. பேர்னட் [illegible] (நிதி அமைச்சு), திரு. [illegible] சூரியாராச்சி (கைத்தொழில், விஞ்ஞான அமைச்சு) ஆகியோர் நேற்று நடைபெற்ற பதவிப் பிரமாண வைபவத்திற்கு சமுகமளிக்கவில்லை.

புதிதாக நியமிக்கப்பட்ட உதவி மந்திரிகளில் 16 பேர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள். தபால் தந்தி உதவி அமைச்சரும், நக்வானை எம். பி. யுமான திரு. வி. டி. ஜி. கருணாரத்தின வைத் தவிர மற்ற அனைவரும் முதல் [illegible] உதவி [illegible] (ம)

## அனுராதபுரம் செல்கிறார்கள்

ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ, பண்டாரநாயக்காவும் மற்றும் அமைச்சர்களும் இன்று அனுராதபுரத்திற்கு விஜயம் செய்கிறார்கள்.

ஐக்கிய முன்னணி அரசின் தலைவிக்கும், மற்றும் அமைச்சர்களுக்கும் பிரமாண்டமான வரவேற்பு உபசாரம் அளிப்பதற்கு வட மத்திய மாகாண மக்கள் ஏற்பாடுகள் செய்துள்ளனர். (ம)

இப் பத்திரிகையை அச்சிட்டவர் சுயா[illegible] சமாஜ[illegible] 5. குணசேனமாவத்தை, கொழு[illegible] 12 [illegible] வெளியிட்ட திகதி 8 ஜூன் 1970.
Thanthi 5. Gunasena Ma[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org